# டி.பி.கே.எல்., பி.பி.ஆர். தீ விபத்து: பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக வீடுகள் பெற்றுத்தர ஃபாமி முயற்சி




கோலாலம்பூர், ஆக. 13-

கோலாலம்பூர் மாநகர மன்றத்திற்கு (டி.பி.கே.எல்) சொந்தமான மக்கள் வீடமைப்பு திட்டத்தில் அண்மையில் நிகழ்ந்த ஒரு தீவிபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக வீடுகளை பெற்று தர லெம்பா பந்தாய் தொகுதி எம்.பி. டத்தோ ஃபாமி ஃபெட்ஸில் பாடுபட்டு வருகிறார்.

இந்த விவகாரம் குறித்து பிரதமர் இலாகா (கூட்டரசுப் பிரதேசங்கள்) அமைச்சர் டத்தோ ஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தாஃபா, கோலாலம்பூர் மேயர் டத்தோ ஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிஃப் ஆகியோருடன் கடந்த சனிக்கிழமை விவாதிக்கப்பட்டதாக தொடர்பு துறை அமைச்சர் ஃபாமி கூறனார்.

பதினான்கு குடும்பங்கள் தற்சமயம் நிவாரண மையத்தில் தங்கியுள்ளன. மேலும் பல குடும்பங்கள் தங்களின் உறவினர் களுடன் தங்கியுள்ளன. அவர்கள் மறுகுடியேற்றம் செய்ய காத்திருக்கிறோம் என்றார் அவர். புதிய தகவல்கள் எதனையும் நான் இன்னும் பெறவில்லை. ஆனால் பள்ளி செல்லும் பிள்ளைகளை கொண்ட குடும்பங்கள், சீருடைகள், உபகரணங்கள் போன்றவை அவர்களிடம் இருப்பதை உறுதிப்படுத்த சமூக நல இலாகாவுடனும் கூட்டரசுப் பிரதேச இஸலாமிய சமய மன்றத்துடனும் ஏற்பாடுகள் செய்து விட்டோம் என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.